

உ

குருபாதம்


திருக்கயிலாய பரம்பரை, தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

அவர்களுடைய திருவருள் துணை கொண்டு

வெளியிடப்பெறும்

சிவாலய வழிபாடு





சித்தாந்தரத்தினம்

தி. திருநாவுக்கரசு

ஆசிரியர் `சிவ சிவ' திங்களிதழ்

உ

திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீகந்த பரம்பரை

சூரியனார் கோயில் ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனத்

திருமுறை சித்தாந்த ஆய்வு மையம்

ஓராண்டுக்கால சைவத் தமிழ்ப் புலவர் சான்றிதழ்

அஞ்சல் வழி நேர்முகப் பயிற்சி வகுப்பு விபரம்

அன்புடையீர்!

சூரியனார் கோயில் ஆதீனகர்த்தர் சீர்வளர்சீர் சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்களுடைய திருவருள் ஆணையின் வண்ணம் ஆதீனத் திருமுறை சித்தாந்த ஆய்வு மையத்தினரால் ஓராண்டுக் கால சைவத்தமிழ்ப்புலவர் சான்றிதழ் அஞ்சல் வழி நேர்முகப் பயிற்சி வகுப்புகள் செப்டம்பர்'2003 முதல் தொடங்கப் பெற்றுள்ளன.

சிறப்பான முறையில் பயிற்சியினை நிறைவு செய்தோர்க்கு சூரியனார் கோயில் ஆதீனகர்த்தர் அவர்கள் 'சைவத் தமிழ்ப்புலவர்' சான்றிதழை வழங்கி ஆசீர்வதிப்பார்கள்.

மேலும் விவரங்களுக்கு 'சிவ சிவ' ஆசிரியர் முகவரியுடன் தொடர்பு கொண்டு பயன் பெறவும்.

உ

திருச்சிற்றம்பலம்

சிவாலய வழிபாடு

சித்தாந்தரத்தினம்

தி. திருநாவுக்கரசு

ஆசிரியர் `சிவ சிவ' திங்களிதழ்

வெளியீடு :

ராகவன். நாராயணன்

தமிழ் மாநிலத் தலைவர்,


எக்ஸனோரா இண்டர்நேஷனல்.

"சிவாலய வழிபாடு"

முதற்பதிப்பு : அக்டோபர் 2003 / 1000 பிரதிகள்

பொருளடக்கம்...

சிவாலய அமைப்புமுறை (பொதுநிலை)



1. இராஜகோபுரம்
2. கொடிமர விநாயகர்
3. கொடிமரம்
4. பலிபீடம்
5. பிரதோஷ நந்தி
6. நடராஜர்
7. கருவறை மூர்த்தம்
8. அம்பிகை
9. சோமாஸ்கந்தர்
10. தெட்சிணாமூர்த்தி
11. தலவிருட்சம்
12. தல விநாயகர்
13. சுப்ரமணியர்
14. லட்சுமி, சரஸ்வதி
15. சண்டிகேஸ்வரர்
16. கூபதீர்த்தம்
17. நவக்கிரகங்கள்
18. பைரவர்



சிவாலய தர்சனமுறை

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற நம் முன்னோர்கள் அக்கோயில்களுக்கு நாள்தோறும் சென்று அனைவரும் வணங்க வேண்டும் என்னும் அடிப்படைக் கருத்தில் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் அறிவுறுத்தியுள்ளனர்.

தற்காலத்தில் ஊர்தோறும் கோயில்கள் பல இருப்பினும் அக்கோயில்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்வது பெருகி வரும் போதிலும் சிவாலயங்களுக்குச் செல்லவேண்டிய முறை, சிவா லயங்களில் உள்ள மூர்த்திகளை வழிபடும் முறை ஆகியவற்றை முழுமையாகப் பலரும் அறிந்திருக்கவில்லை என்றே கூறலாம்

ஆதலின் கோயில்களுக்குள் செல்வோர் தங்கள் மனம் போனவாறு கோயில்களைச் சுற்றி வலம் வருவதும் வழிபாடு செய்வதும் நாள்தோறும் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் பொதுவாகச் சிவன் கோயில்களுக்குள் செல்வோர் வழிபடவேண்டிய முறைகளைப் பற்றி ஈண்டு ஒரு சிறிது விளக்கப்படுகின்றது.

காலை எழுந்து காலைக் கடன் முடித்து குளிர்ந்த நீரில் நீராடி, 'சிவாய நம' என்று திருநீறு அணிந்து சிவனை நினைந்து தியானம் செய்து . பூசைக்குரிய அபிஷேக, அர்ச்சனைப் பொருள்களையும், தூப தீபத்திற்குரிய பொருள்களையும் இயன்ற வகையில் தம்முடன் எடுத்துக் கொண்டு கோயில்களுக்குச் செல்ல வேண்டும்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்:

கோயிலின் முன்புறம் நெடிதுயர்ந்து காணப்பெறும் ராஜ கோபுரத்தை சிவபெருமானுடைய ஸ்தூல லிங்கமாகக் கருதி இரண்டு கைகளையும் சிரமேல் குவித்து,

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்று ஓலமிட்டு வணங்கி, கோயில் உள்ளே செல்லுதல் வேண்டும். அப்படிச் செல்லும் கால் காலணிகளை அணிந்துசெல்லலாகாது. காலணி களைப் பைகளில் போட்டுக் கையோடு கொண்டு செல்லவும் கூடாது.

நமஸ்கார வகைகள்:

கோயிலின் முதற்கன் கொடிமரவிநாயகர் நமக்குக் காட்சி தருகின்றார். அவர் திருமுன்னர் ஆண்காளாயின் அஷ்டாங்க நமஸ்கார்த்தையும் (தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய்,

புயங்கள் இரண்டு என்னும் எட்டு உறுப்புகளும் நிலத்தில் பொருந்துமாறு வணங்குதல்), பெண்களாயின் பஞ்சாங்க நமஸ்காரத்தையும் (தலை, இரு கைகள், முழந்தாள்கள் என்னும் ஐந்து உறுப்புகளும் நிலத்தில் தோய வணங்குதல்) செய்து கீழே விழுந்து வணங்குதல் வேண்டும்.

அவ்வாறு வணங்கும்போது கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதிகளாயின் வடக்கே தலை வைத்தும், தெற்கு வடக்கு நோக்கிய சந்நிதிகளாயின் கிழக்கே தலை வைத்தும் நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

நமஸ்காரம் செய்யும்பொழுது மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது முறை வணங்குதல் வேண்டும். மாறாக ஒரு முறை, இரு முறை வணங்குதல் கூடாது.

குறிப்பிட்ட இவ்விடத்தைத் தவிர கோயிலின் வேறு எந்த பகுதியிலும் கீழே விழுந்து நமஸ்காரம் செய்தல் கூடாது.

கொடிமர விநாயகர் வழிபாடு:

நமஸ்காரம் செய்து வணங்கிய பின்னர் எழுந்து இரண்டு கை களாலும் தலையில் குட்டிக்கொண்டு விநாயகக் கடவுளை நோக்கி வணங்கி,




ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

என்று பாடிப் பரவுதல் வேண்டும். பின்னர் நெடிதுயர்ந்த கொடிமரத்தை அண்ணாந்து நோக்கி 'அரகரசிவசிவ அரகரசிவசிவ' என்று வணங்குதல் வேண்டும்.

திருநந்திதேவர் வழிபாடு:

அடுத்துள்ள பலிபீடத்தில் நம்முடைய பாவ வினைகளைப் பலியிட்டதாகக் கருதி வணங்கிய பின் அடுத்துக் காணப்பெறும் திருநந்தி தேவரை இருகரம் கூப்பி,

வந்துஇறை அடியில் தாழும் வானவர் மகுடம்கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்



என்று வாழ்த்தி வணங்க வேண்டும்.

நால்வர் வழிபாடு:

பின்னர் சைவ சமயப் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர், மணிவாசகர் முதலான நால்வர் சந்நிதியை அடைந்து,

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி

என்று பணிந்து போற்றித் துதிக்கவேண்டும்.

நடராஜர் வழிபாடு:

நால்வர் சந்நிதிக்கு எதிராக அமைந்துள்ள சிவகாமியம்மை உடனாய நடராஜப்பெருமான் சந்நிதியை அடைந்து காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி,




குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

என்னும் தேவாரத்தைப் பாடிப் பரவித் துதித்தல் வேண்டும்.

சிவபெருமான் வழிபாடு:

நடராஜர் சந்நிதியை அடுத்து நாம் ஆதியும் அந்தமும் இல்லாத பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் அருவுருவ லிங்கமாகக் காட்சித்தந்து அடியார்க்கு அருள்புரியும் கருவறை முன்னர் நின்று நெஞ்சம் நெகிழ்ந்து, பன்னிரு திருமுறைப் பாடல்களைப் பாடிப் பரவி,



எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

என்று போற்றித் துதித்து சிவனுக்குரிய அர்ச்சனைகளைச் செய்து தீபதூபங்களைக் காட்டி வழிபடுதல் வேண்டும்.

உமையம்மை வழிபாடு:

சிவன் சந்நிதியை அடுத்துள்ள அம்பிகை சந்நிதியை அடைந்து தாயினும் இனிய தயவுடனே இவ்வுலகைக் காத்து ரட்சிக்கும் லோக மாதாவைக் கைகூப்பி வணங்கி,

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்பும்இள நகைபோற்றி ஆரணநூ புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி

என்று பாடிப்போற்றி அர்ச்சனைகள் செய்து தூப தீபம் காட்டி வழிபடுதல் வேண்டும்.

சோமாஸ்கந்தர் வழிபாடு(தியாகராஜர்):

ஒவ்வொரு சிவன்கோயிலிலும் தென்கிழக்கில் சிவன் ஸ்கந்தருடனும் உமையுடனும் இணைந்து காட்சிதரும் சோமாஸ்கந்தர் சந்நிதி அமைந்து காணப்பெறும். அவ்விடத்து நின்று,

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் உறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியொடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமரர் ஏறே.

என்ற பாடித் துதிக்கவேண்டும்.

தெட்சணாமூர்த்தி வழிபாடு:

ஒவ்வொரு சிவன் கோவிலிலும் கர்ப்பக்கிரகத்தின் தென் புறத்தில் கோஷ்ட மூர்த்தமாக ஆலமர் கடவுள் எனப்பெறும் தெட்சணா மூர்த்தி சன்னதி அமைந்து காணப்பெறும். சனகாதி முனிவர்கள் நால்வருக்கு அறம் பொருள் இன்பம் வீடு எனும் நால்வகை மெய்ப் பொருள்களை அருளிய இம்மூர்த்தியின் முன்னர் நின்று இருகை கூப்பித் தொழுது,

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கு இறந்த பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்

என்று பாடிப் பரவுதல் வேண்டும்.

பஞ்சாட்சரத் தியானம்:

அச்சன்னதியின் முன்னர் அமர்ந்து ஐம்புலன்களையும் அகத் தடக்கி ஒருமையுடன் சிவன் திருஐந்தெழுத்து மந்திரமாகிய 'சிவாயநம' அல்லது

'நமச்சிவாய' மந்திரத்தை நூற்றி எட்டு முறை ஜெபித்தல் வேண்டும். (இவ்வாறு தியானம் செய்வதற்கு உரியோர் சைவ சமயக் குருமார் களிடம் சமய தீட்சை பெற்றவராக இருத்தல் நலம்).

அறுபத்து மூவர் வழிபாடு :

பெரும்பாலான சிவாலயங்களின் தெற்குப் பிரகாரத்தில் வடதிசை நோக்கியவாறு அறுபத்து மூவர் திருஉருவங்கள் கைகூப்பிய நிலையில் அமைந்திருக்கக் காணலாம். சில கோயில்களில் வடக்கு பிரகாரத்தில் தெற்கு நோக்கியவாறு அறுபத்தி மூவர் வடிவங்கள் அமைந்தும் இருக்கும். இம்மூர்த்தங்களின் முன் நின்று சுந்தரர் அருளிய 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' எனத் தொடங்கும் திருத்தொண்டத் தொகையினைப் பாராயணம் செய்தல் நலம் அல்லது கீழ்க்காணும் திருப்பாடலை ஓதி அறுபத்து மூவர் வழிபாட்டினை மேற்கொள்ளலாம்.

தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேர்அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

- அருணாசல புராணம்.

தலவிநாயகர் வழிபாடு.

சிவன் கோயில்களில் விநாயகர் சன்னதி பல இருப்பினும் கோயிலின் தென்மேற்கு மூலையில் (கன்னி மூலை) அமர்ந்தருளும் விநாயகரே தலவிநாயகராக வணங்கப்பெறுவது மரபு. அவ்வகையில் கன்னிமூலை கணபதியினை இருகை குவித்து வணங்கி,



வானுலகு மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

என்று போற்றி மகிழ்தல் வேண்டும்.

திருமுருகன் வழிபாடு:

அதனை அடுத்துக் காணப்பெறும் சன்னதி வள்ளி தெய்வயானை உடனாய திருமுருகன் சன்னதியாகும். மயில்வாகனன், சேவற் கொடியோன், வேலாயுதன், ஆறுமுகன், பன்னிருகையன் என பலவாறு போற்றப்பெறும் சுப்பிரமணியக் கடவுளை இருகை தொழுது இறைஞ்சி 'ஓம் சரவணபவாய நம' எனும் ஆறெழுத்து மந்திரத்தைத் தியானித்து,



பன்னிரு கரத்தாய்போற்றி பசும்பொன்மா மயிலாய்போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமாமணியே போற்றி

என்று பாடிப் பரவுதல் வேண்டும்.

லிங்கோற்பவர் /அர்த்த நாரீஸ்வரர் வழிபாடு :

சிவாலயங்களில் பெரும்பாலும் கர்ப்பக்கிரகத்தின் பின்புறம் சுப்பிரமணியர் சன்னிதியின் முன்பாகக் கோஷ்ட மூர்த்தமாகத் திருமாலாலும், பிரமனாலும் அடிமுடி காண ஒண்ணாத சிவபெருமானுடைய லிங்கோற்பவ வடிவமோ அல்லது மாதொரு பாகனாகிய அர்த்த நாரீஸ்வரர் வடிவமோ அமைந்து காணப்படும். லிங்கோற்பவராயின்,

அண்ணாமலைஎம் அண்ணாபோற்றி
கண்ணார்அமுதக் கடலே போற்றி

என்றும் அர்த்தநாரீஸ்வரர் வடிவம் ஆயின்

மாதொர் பாகம்மகிழ்ந்தாய் போற்றி
மாதவர் போற்றும் மருந்தே போற்றி

எனவும் போற்றி வணங்குதல் வேண்டும்.

திருமால் வழிபாடு:

ஒரு சில சிவாலாயங்களில் கர்ப்பக்கிரகத்தின் பின்புறம் கோஷ்ட மூர்த்தமாகவோ, வடமேற்குத் திசையில் தனிச் சன்னதியாகவோ திருமால் சன்னிதி அமைந்திருக்கும். திருமால் சந்நிதியின் முன் நின்று திருமால் துதியாக,



உயர்வர உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எனவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எனவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே

என்னும் பாடலைப் பாடிப் பரவலாம்.

ஷண்மத வழிபாடு:

ஆதிசங்கரரால் அருளப்பெற்றதாகக் கூறப்பெறும் கணபதி வழிபாடு, முருகன் வழிபாடு, சிவன் வழிபாடு, உமை வழிபாடு, திருமால் வழிபாடு, சூரிய வழிபாடு ஆகிய ஷண்மதக் கடவுளர்களுக்கான வழிபாட்டு மையமாகச் சிவன் கோயில் அமைப்புமுறை அமைந்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்குமி வழிபாடு:

சிவன் கோயிலின் வடமேற்குத் திசையில் பெரும்பாலும் இலக்குமி சன்னதி அமைந்து காணப்பெறும். தமைத் துதிப்போர்க் கெல்லாம் செல்வச் சிறப்பினைத் தந்தருளும் திருமகளைத் துதித்து,

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி செங்கமலக் கையாய் செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலான் தனைஈன்ற விந்தை தூய
அமுதகும்பம் மலர்க்கரத்தாய் பாற்கடலுள் அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்
திமிரம்அகன் றிடஒளிரும் செழுஞ்சுடரே என்வணக்கம் செய்வான் மன்னோ

என்ற பாடலை ஓதுதல் வேண்டும்.

சரஸ்வதி வழிபாடு:


இலக்குமி சன்னிதியை அடுத்துப் பெரும்பாலான கோயில்களில் கல்விக் கடவுளான சரஸ்வதி சன்னதி அமைந்து காணப்பெறும். ஆயகலைகள் அறுபத்துநான்கினையும் நமக்கு அருளும் கலைமகள் திருமுன்பாக நின்று கைதொழுது,

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப் பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழியியணி பெறமுக்கண் மூர்த்தி தனில்
தொழுதகன்ற அன்பெனும்நார் தொடுத்து அலங்கல் சூட்டவரிச் சுரும்புந் தேனும்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தாள் அடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்

என்று போற்றித் துதித்து வணங்குதல் வேண்டும்.

பிரமன் வழிபாடு:

படைப்புக் கடவுள் ஆகிய பிரமனுக்கு ஒருசில ஊர்களைத் தவிர ஏனைய ஊர்களில் தனியாக ஆலயம் அமைக்கப்பெறவில்லை. ஆயினும் ஒவ்வொரு சிவன் கோயிலின் கர்ப்பக்கிரகத்தின் வடபுறம் கோமுகையின் மேலாக நான்முகனுடைய வடிவம் அமைக்கப்பெற்று இருக்கும். அவ்வடிவின் முன்நின்று,



உலகின் உயர்திணை அஃறிணை உயிர்களை
நிலவிடும் வண்ணம் படைத் தருள்நல்கிடும்
கலைமகள் கேள்வனாம் பிரம்ம மூர்த்திநின்
மலர்திரு வடியினை மகிழ்ந்துபோற்றுவாம்

என்று பாடிப் பரவுதல் வேண்டும்.

துர்க்கை வழிபாடு:

சிவன் கோயில் கர்ப்பக்கிரகத்தின் வடபுறம் கோஷ்டமூர்த்தமாகப் பெரும்பாலும் துர்க்கை சன்னதி அமைந்திருக்கும். மகிஷாசூர மர்த்தனி

யாகிய சிவனருட்சக்தியைத் தரிசனம் செய்து,

சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத் தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத் தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே

எனும் பாடலைப் பாடி வணங்குதல் வேண்டும்.

நவக்கிரக வழிபாடு: -

அதன்பின்னர் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது எனப்பெறும் நவக்கிரகங்களின் சன்னதியை அடைந்து,

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல்துன்னி வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாதவண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.

எனும் ஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களைப் பாடித் துதித்தல் வேண்டும். தொடர்ந்து கீழ்க்காணும் நவக்கிரகத் தோத்திரப் பாடல்களை ஒவ்வொன்றாகச் சொல்லி அதற்குரிய கிரகங்களை வணங்குதல் வேண்டும்.

சூரியன் துதி

எங்கும் இருளகற்றி ஏழுபரித் தேரேறித்
துங்கமுடன் சுற்றிவரும் சோதிமணிச் சூரியனே
துன்ப இருளகற்றி தூயநலம் திகழ
இன்றே தருவாய் அருள்!

சந்திரன் துதி

தரணியில் வாழ்வோர்க்குத் தன்மையினைத் தந்தருளி
நீரணிந்தோன் நெற்றியிலே நின்றிலங்கும் வெண்ணிலவே
என்றன் துயர்நீக்கி இன்பம் பலவாக்கி
நன்றே புரிவாய் நயந்து.



செவ்வாய் துதி

வசனநல் தைரி யத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கி ரமங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவர வர்க்கு நீணிலம் தனில எிக்கும்
குசனிள மகனாம் செவ்வாய் குரைகழல் போற்றி! போற்றி!!.

புதன் துதி

வித்தைக் களஞ்சியமே வெற்றிமிகு நாயகமே
புத்திக்கு வித்தே புதனே உனைத்துதிப்பேன்
சித்தம் மகிழ்ந்து சிறியேன் நலமடைய
நித்தம் அருள்வாய் நினைந்து!.

வியாழன் துதி

தேவரெல்லாம் போற்றத் திகழ்கின்ற நற்குருவே
நாவாரப் பாடி நயந்துருகிப் போற்றுகின்ற
சேயாம் எனத்குத் திருவருளைச் செய்கின்ற
தூயாய் எமக்குத் துணை!

சுக்கிரன் துதி

மன்னுகலை நாயகனே மாண்புதரும் சுக்கிரனே
சென்னி வணங்கித் தினமும் துதி செய்வேன்
பொன்னும் கலையும் புகழும் பொருந்திடவே
உன்னருளைச் செய்வாய் உகந்து.

சனிஸ்வரன் துதி

ஒன்பான் கிரகத்துள் ஒன்றாய் மிளிர்கின்ற
அன்பாய் நலம்புரியும் அண்ணல் சனீஸ்வரனே
என்பால் அடைந்தாலும் ஏழைக்கு இரங்கிஇனி
நன்மையே செய்வாய் நயந்து!

இராகு துதி

இன்பமே செய்யும் இராகு பகவானே
அன்பாக உந்தன் அடிபணிவேன் என்குடும்பம்
செல்வ வளமுடனே சீரோங்கி வாழ்வதற்கு
நல்லருளைச் செய்வாய் நயந்து!

கேது துதி

சீர்மேவும் கேதரசே செல்வச் செழிப்புடனே
பார்புகழும் வாழ்வும் பல்வளமும் பெற்றினிது
எங்கள்குடி தழைக்க என்றென்றும் உன்றனது
துங்கமிடும் பாதம் துணை!.

சண்டிகேஸ்வரர் வழிபாடு:

நிறைவாகக் கோமுகையை அடுத்துள்ள தெற்கு நோக்கிய சண்டி கேஸ்வரர் சன்னதியை அடைந்து இதுகாறும் நாம் உள்ளன்புடன் மேற் கொண்ட சிவாலய தரிசனப் பலனைத் தந்தருளுமாறு உளமுருகி வேண்டி,

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற் கமைக்கும் போனகமும்
மின்னுங் கலனாடைகள் பிறவும் வேறுதனக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளுந் தூயோனடித் தாமரை தொழுவாம்

என்று தொழுது வணங்குதல் வேண்டும்.

பைரவர் வழிபாடு:

சிவாலயத்தின் வடகிழக்குத் (ஈசானிய) திசையில் அமைந்துள்ள பைரவர் சன்னதியின் முன் நின்று வணங்கி,

பரமனை மதித்திடாப் பங்கய ஆசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

என்று போற்றி வணங்குதல் வேண்டும்.

வாழ்த்துப் பாடல்:

வழிபாட்டின் நிறைவாக மீண்டும் கொடிமர விநாயகர் சன்னதியை அடைந்து கீழே விழுந்து வணங்கி,

வாழ்க அந்தணர்! வானவர்! ஆனினம்!
வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயது! எல்லாம் அரன் நாமமே
சூழ்க! வையகமும் துயர் தீர்கவே.

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நல்தவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

வையம் நீடுக; மாமழை மன்னுக;
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக;
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக;
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியா ரெல்லாம்.

எனும் மங்கள வாழ்த்துப் பாடல்களைப் பாடி வணங்கி ராஜகோபுரத்தின் கீழ் அமர்ந்து சிவனருளைச் சிந்தித்துத் தியானம் செய்து அதிகார நந்தியிடம் விடைபெற்றுச் சிவ சிந்தனையுடன் இல்லம் திரும்புதல் வேண்டும்.

பஞ்சமூர்த்தி வழிபாடு:

மேற்காணுமாறு சிவலாயங்களில் பரிவார மூர்த்தங்கள் அனைத்தும் அமையப்பெற்றிருக்கும். ஒருசில கோயில்களில் ஒரு சில சன்னதிகள் இல்லாமலும் இருத்தல் கூடும். ஆயினும் சிவாலயங்களில் விநாயகர், முருகன், சிவன், உமை, சண்டிகேஸ்வரர் எனும் ஐந்து மூர்த்தங்கள் நிச்சயம் அமைந்து இருக்கும். அவை சிவாலயம் பஞ்ச மூர்த்திகள் என்று குறிப்பிடப்பெறும். விசேஷ உற்சவக் காலங்களில் மேற்காணும் பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா வருவர். ஆதலின் சிவாலய வழிபாடு செய்வோர் பஞ்ச மூர்த்திகளை அவசியம் வழிபாடு செய்தல் வேண்டும். பரிவார மூர்த்திகளுள் துர்க்கை, நவக்கிரகம் முதலான ஒருசில மூர்த்தங்களை மட்டும் அவரவர் விருப்பம் போல் வழிபாடு செய்து விட்டு மூலஸ்தான மூர்த்திகளை வழிபாடு செய்யாமல் இல்லம் திரும்புதல் பெருந் தோஷம் ஆகும். ஆதலின் அவ்வாறு வழிபடுவதை அன்பர்கள் தவிர்த்தல் வேண்டும்.

வலம் வரும் முறை :

சிவன்கோவிலில் மூன்று ஐந்து ஏழு முதலான முறைகளில் பிரதட்சணம் வலம் வருதல் வேண்டும். விநாயகர் கோவிலை ஒரு முறையும் சூரியனை இருமுறையும் அம்மனை நான்கு முறையும் முருகனை ஆறு முறையும் வலம் வருதல் வேண்டும். ஆலயத்தில் மூலஸ்தானத்தைத் தவிர இதர பரிவார மூர்த்திகளைத் தனித்தனியே வலம் வரக் கூடாது. மூலஸ்தானத்தைச் சேர்த்தே பிரதட்சணம் செய்ய வேண்டும்.

அவ்வாறு பிரதட்சணம் செய்யும் போது நந்திக்கும் சுவாமிக்கும் குறுக்கே செல்லாமல் அவற்றைச் சேர்த்தே வலம் வர வேண்டும்.

மெதுவாக அடிமீது அடி வைத்துப் பிரகாரத்தில் பிரதட்சணம் செய்ய வேண்டும். நிறை மாதக் கர்ப்பிணிப் பெண் எண்ணை நிறைந்த குடத்தைத் தலை மீது வைத்துக் கொண்டு காலில் விலங்கு பூட்டப் பட்டவளாய் நடப்பது போல் மெதுவாகப் பிரதட்சணம் செய்ய வேண்டும். இரண்டு கைககளையும் மார்புக்கு நேராகக் கூப்பியவாறு பஞ்சாட்சரத்தை சொல்லிக் கொண்டு வேறு சிந்தனைகள் எதுவும் இல்லாமல் வலம் வர வேண்டும். பிறரிடம் ஊர் உலக விசயங்களைப் பேசிக் கொண்டும், உல்லாசமாகச் சிரித்துக் கொண்டும் வேக வேகமாகவும் வலம் வருதல் கூடாது.

மூலவரைத் தரிசனம் செய்த பின் மூலவருக்குப் பின்புறம் காட்டிக் கொண்டு திரும்பி வரக்கூடாது. மெலே துண்டுபோட்டுக் கொண்டு வலம் வரக்கூடாது. கோபுர நிழலை மிதிக்கவோ, கையினால் விக்கிரகங்களைத் தொடவோ கூடாது. கோவிலுக்குள் உணவு உண்ணுதலோ, உறங்குதலோ, எச்சில் துப்புவதோ, மூக்கு சிந்தவோ, திரைப்படப் பாடல்களைச் சீழ்க்கை அடித்தலோ கூடாது. ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு முண்டிச் செல்லுதலைத் தவிர்த்தல் வேண்டும்.

சண்டிகேஸ்வரர் சன்னதியில் அவரைச் செவிட்டுச் சாமி என்று கூறிப் பலமாகக் கைத்தட்டுவதோ, தாங்கள் அணிந்துள்ள ஆடையில் இருந்து நூலினைப் பிய்த்துப்போடுதலோ கூடாது.

பிரதோச காலப் பிரதட்சணம் :

பிரதோச காலங்களில் மட்டும் சிவாலயங்களை வலம் இடமாகவும், இடம் வலமாகவும் மும்முறை வலம் வரும் முறை சோமசூக்தப் பிரதட்சணம் என்று கூறப்படுகின்றது. இவ்வேளையில் கோமுகையில் இருந்து அபிஷேக நீர் செல்லும் பாதையைத் தாண்டிச் செல்வது பெரும் பாவமாகக் கருதப்படுகிறது.

பிரகாரப் பிரதட்சண பலன் :

சிவன் கோவில் பிரகாரங்களில் காலையில் வலம் வந்தால் நோய்கள் நீங்கும், பகலில் வலம் வந்தால் இன்பம் சிறக்கும், மாலைப் பொழுதில் வலம் வந்தால் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கும், அர்த்தயாமத்தில் வலம் வந்தால் மோட்சம் கிட்டும் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

சிவன் வடிவ வழிபாட்டுப் பலன்கள் :

சிவன் மேற்கொண்டருளிய பல்வேறு வடிவங்களை வழிபடுவதன் வாயிலாகக் கிடைக்கப் பெறும் பலன்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. உருத்திரன் - இவரை வழிபட உலகமுழுவதையும் ஒரு நொடிப்பொழுதில் அழிக்கும் வன்மை ஏற்படும். இதனால் பொருளும் வலிமையும் நிறையக் கிடைக்கும் என்பார்.

2. உமாமகேசுவரர் - இவரை வழிபட வேகத்தைத் தடுத்துத் திருமண விருப்பைக் கொடுப்பார்.

3. கல்யாண சுந்தரர் - இவரை வழிபடப் பிரமனும் தலையசைக்கத் திருமணத்தை முடித்து அருள்வார்.

4. அர்த்த நாரீஸ்வரர் - இவரை வழிபடப் பெண்கள் போகத்தில் மிக மோகம் விளைப்பார்.

5. சோமாஸ்கந்தர் - இவரை வழிபட நற்புத்திரப் பேறும், சந்தான விருத்தியும் கிடைக்கும்.

6. சக்ரப்ரதர் - இவரை வழிபட உலகம் வியக்கப் பெரும் போகம் கிடைக்கும்

7. தட்சிணாமூர்த்தி - இவ்வரை வழிபடத் தன்பால் அன்பும், உலகத்தின் பால் உவர்ப்பும் உண்டாகும்.

8. பிட்சாடனர் - இவரை வழிபடப் போகத்தில் வெறுப்பு உண்டாகும்.

9. கங்களார் - இவரை வழிபட வைராக்கியம் கிடைக்கும்.

10. காமதகனமூர்த்தி - இவரை வழிபட மெய்ஞ்ஞானம் தோன்றி தம் திருவடியைச் சேரும் பக்குவத்தை உண்டாக்குவார்.

11. காலாரி - இவரை வழிபடத் துன்பங்களைத் தீர்த்து அபயம் அருளுவார்.

12. சலந்தராரி - இவரை வழிபட யோகம் செய்வோரின் கோபக் கனலை அழிப்பார்.

13. திரிபுராரி - இவரை வழிபட மாறுபட்ட ஆன்மாக்களை வசப்படுத்தும் முக்குணங்களையும் மாற்றுவார்.

14. சரப மூர்த்தி - இவரை வழிபடுவதன் வாயிலாக வறுமை நீங்கிச் சகல சௌபாக்கியங்களும் வாழ்வில் பெருகும்.

15. நீலகண்டர் - ஆணவமலம் இனித் தனக்கு இடமில்லை என்று ஓடும்படி அருளுவார்.

16. திரிபாதமூர்த்தி - மீளவும் கருவிற்புகுதலை வெறுக்கின்ற சரியை, கிரியை யோகங்களில் முயலும் முறையினை அருள்வார்.

17. ஏகபாத மூர்த்தி - மனம் ஞான நிட்டையை விரும்ப அருள்புரிவார்.

18. வடுகபைரவர் - வாழ்நாள் முழுதும் ஆசையை வென்று வாழலாம்.

19. இடபாருடர் - கருணை செய்து பாதுகாப்பார்.

20. சந்திரசேகரர் - பிறப்பு இறப்புகளில் அச்சம் தோன்றச் செய்வார்.

21. ஆனந்த நடராசர் - இவரை வழிபடப் பொறியடக்கம் பெற்றவர்களுக்கு ஆனந்த வெள்ளம் பெருகச் செய்வார்.

22. கங்காதர மூர்த்தி - உயிர்களுக்கு இடையீடில்லாத ஆனந்தம் அருள்வார்.

23. சிவலிங்க மூர்த்தி - இவரை வழிபடச் செல்வம், அரசாளும், பெருமை, தேவருலகாலும் பெருமை இவை அனைத்தையும் மற்றும் வீடு அடையும் பேறு இவற்றுள் எதை விரும்பினாலும் விரைவில் அருள்வார்.

த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்

(தைத்ரீயோபநிஷத்)

பொருள் : முக்கண்ணை உடைய சிவபெருமானை வணங்குவோம். நறுமணம் உடையவரும், எல்லா ஜீவன்களையும் காப்பவருமான அப்பெருமான் வெள்ளரிப் பழம் கொடியின் பிடியிலிருந்து எவ்வாறு விடுபடுகிறதோ அவ்வாறு நம்மை மரணத்தி லிருந்தும் விடுவித்து மரணம் இல்லாப் பெருவாழ்வில் சேர்ப்பாராக.

அஷ்டமூர்த்த வணக்கம்:

1. பிருதிவி வடிவமாகிய விக்ரக வணக்கம்.
2. கங்கை போன்ற தீர்த்த வணக்கம்.
3. யாகம் போன்றவற்றால் செய்யப்படும் அக்னி வணக்கம்.
4. சிவ பூசையில் செய்யப்படும் சூரிய வணக்கம்.
5. சிவ பூசையில் செய்யப்படும் சந்திர வணக்கம்.

6. அடியார்கள் வணக்கம்.

7. குரு முதலியோர்களை வணங்கும் குரு வணக்கம்.

8. பஞ்சபூதங்களில் வணங்கப்படும் பஞ்ச பூதலிங்க வணக்கம்.

சிவன்கோயிலில் செய்யத்தக்க செயல்கள் :

1. நீராடித் தூய ஆடை அணிந்து, திருநீறு, உருத்திராக்கம், அணிந்து ஆலயம் செல்க.

2. மலர், தேங்காய், பழம், கற்பூரம், விளக்கு எண்ணெய் ஆகியவற்றுள் இயன்ற வழிபாட்டுப் பொருள்களை உடன் கொண்டு செல்க.

3. ஆலயம் தன்னை அரன் எனத் தொழுது திருவைந் தெழுத்தினை ஓதியவாறு செல்க.

4. தல விநாயகரை வணங்கித் தோப்புக்கரணம் போட்டுக் கொண்டு பலிபீடம், நந்தியைத் தரிசித்து மேற்செல்க.

5. கருவறை மூல லிங்கங்கத்தையும் அம்மன் சந்நிதியையும் முறைப்படி வணங்கிப் பின் பரிவார மூர்த்திகளை வணங்குக.

6. திருநீற்றுப் பிரசாதத்தினைக் கீழே சிந்தாமல் அணிந்து மகிழ்க.

7. சிவன் கோயிலை மும்முறை வலம் வருக.

8. ஒவ்வொரு சந்நிதியிலும் ஏற்ற வழிபாட்டுப் பாடல்களைப் பொருளுணர்ந்து ஓதுக.

9. வழிபாட்டின் நிறைவாகச் சண்டேசப் பெருமானை வணங்குக.

10. வழிபாடு முடிந்து கொடிமரத்தின் கீழ் விழுந்து ஏற்ற முறையில் வணங்குக.

11. பின் அங்கேயே சிறிது நேரம் அமர்ந்து சிவத்தியானம் செய்க.

12. பின் இயன்ற தான தர்மங்களைச் செய்து சிவசிந்தனையுடன் இல்லம் செல்க.

சிவன் கோயிலிலும், வீதிகளிலும், இல்லங்களிலும் செய்யக் கூடாதன :

1. நடந்துகொண்டும், கிடந்துகொண்டும் விபூதி தரித்தல் ஆகாது.

2. சட்டை போட்டுக்கொண்டும், தலையிலே முண்டாசுக் கட்டிக்கொண்டும், துணியால் உடம்பைப் போத்திக்கொண்டும் தலையை விரித்துக் கொண்டும், கௌபீனம்தணியமாலும், வேட்டி அணியமாலும், இருளில் இருந்துகொண்டும் மந்திரங்களைத் தியானம் செய்யக் கூடாது.

3. கீழானவர்கள் வசிக்கும் இடத்திலும், கள்உண்டவர் வாழும் இடத்திலும், புலால் உண்பவர் இடத்தும், நியமமாய் வாழதார் இடத்தும், உணவு உண்ணலாகாது.

4. கோயிலில் கிழக்கிலும், வடக்கிலும் கால்களை நீட்டி நமஸ்காரம் செய்வது கூடாது.

5. மூலஸ்தான மூர்த்திக்கு அபிஷேகம் நைவேத்தியம் முதலானவை நடக்கும் போது சுவாமி தரிசனம் செய்யக்கூடாது. மேலும் அவ்வமயம் கோயில் உட்பிரகாரங்களில் வலம் வருதலையும் தவிர்த்தல் வேண்டும்.

6. கோவிலுக்குள் நீராடாமல் செல்வதோ, நீராடிய பின் ஈர ஆடையுடன் செல்வதோ கூடாது.

மேலும் கோவிலில் செய்யத் தகாதன...

தீட்டுடன் போதல், கோபுர நிழலை மிதித்தல், தும்முதல், அபான வாயு விடல், புகைத்தல், அசுத்தம் செய்தல், போர்த்திக்கொண்டு செல்லல், உயராசனத்திருத்தல், துண்டு அணிந்து செல்லல், செருப் புணிந்து போதல், குடை பிடித்தல், தாம்பூலம் அணிந்து செல்லல், எச்சில் துப்புதல், மலங்கழித்தல், மூக்கு சிந்துதல், முடியைக் கோதுதல், சூதாடுதல், சிரித்து விளையாடல், சண்டையிடல், வீண்மொழி பேசல், கால்களை நீட்டி அமர்தல், தூங்குதல், கைகால் சுத்தி செய்யாமல் செல்லுதல், சுவாமி பலிபீடம் இடை செலல்/ நமஸ்கரித்தல், அன்னியர் யாவரேயாயினும் கோயிலுக்குள் வணங்குதல். ஆகியவற்றைச் செய்யலாகாது.

சிவனடியார்களுக்குரிய பத்துவகை மெய்ப்பாடுகள்

கண்டம் தடித்தல்	நாத்தழுதழுத்தல்	இதழ் துடித்தல்
நடுக்கமுறல்	மயிர்பொடித்தல்	அங்கம் வெதும்புதல்
தள்ளாடி விழுதல்	கண்ணீர் பெருகுதல்	இரங்கல் பரவசப்படுதல்

உருத்திராக்கம் தரித்தலாகாக் காலங்கள் ஆறு

சயனம், மலசலமோசனம், புணர்ச்சி, நோய், கனனாசௌசம், பூரண சௌசம்.

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைப் பாராயணம்

சிவன் கருவறை முன் நின்று சிவனடியார்கள் இருபத்திஏழு திருமுறைச் சான்றோர்களால் அருளிச் செய்யப்பெற்ற இருபத்திஏழு பாடல்களை முழுமையாகப் பாராயணம் செய்வதே முறையான திருமுறை விண்ணப்பம் ஆகும். அவ்வாறு ஓத இயலாதபொழுதில் பன்னிரு திருமுறைகளில் இருந்து பன்னிரு பாடல்களைப் பாராயணம் செய்தல் வேண்டும்.

பஞ்சபுராணம்:

பன்னிரு திருமுறைப் பாடல்களைப் பாராயணம் செய்ய இயலாத வேளைகளில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்பவற்றிலிருந்து தலா ஒரு பாடல் வீதம் பாடுதல் வேண்டும். பன்னிரு திருமுறைப் பாடல்கள்.

1. திருஞானசம்பந்தர் (முதல் மூன்று திருமுறைகள்)
முதல் திருமுறை - திருநல்லூர் - பண், குறிஞ்சி

வண்ண மலரானும் வையம் அளந்தானும்
நண்ணல் அரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேத்த
எண்ணும் அடியார்கட்குஇல்லை இடுக்கணே!

இரண்டாந்திருமுறை - திருப்பெரும்புலியூர் - பண், காந்தாரம்

மண்ணுமோர் பாகம் உடையார் மாலுமோர் பாகம் உடையார்
விண்ணுமோர் பாகம் உடையார் வேதம் உடைய விமலர்
கண்ணுமோர் பாகம் உடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாகம் உடையார் பெரும்புலி யூர் பிரியாரே

மூன்றாந்திருமுறை திருவாவடுதுறை - பண், காந்தார பஞ்சமம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

'இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே'

2. திருநாவுக்கரசர் (நான்கு, ஐந்து, ஆறாந்திருமுறைகள்)

நான்காந்திருமுறை - திருஆலவாய் - திருநேரிசை

வேதியா வேத கீதா விண்ணவர் அண்ணா என்றென்று
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியம் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள்செயாயே!

ஐந்தாந்திருமுறை - திருப்பூவனூர் - திருக்குறுந்தொகை

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறு நூறாயிரம் நண்ணினார்
பாவம் ஆயின பாறிப் பறையவே
தேவர் கோவினும் செல்வர்கள் ஆவரே!

ஆறாந்திருமுறை - திருக்கருகாவூர் - திருத்தாண்டகம்

குருகாம் வயிரமாம் கூறு நாளாம்
கொள்ளும் கிழமையாம் கோளே தானாம்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டில் பண்ணாம்
ஒருகால் உமையாளோர் ப்ாகனுமாம்
உள்நின்ற நாவிற்கு உரையாடியாம்
கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண்ணாம் கருகாவூர் எந்தை தானே!

3. சுந்தரமூர்த்தி நாயனார் (ஏழாந்திருமுறை)

திருப்பாண்டிக் கொடுமுடி - பண் பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்தும் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயமே!

4. மணிவாசகர் (எட்டாந்திருமுறை)

திருவாசகம்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!

திருக்கோவையார்

திருவளர் தாமரை சீருவளர்காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காந்தள் கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியின் ஓங்கி அன்நடைவாய்ந்து
உருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே

5. திருமாளிகைத்தேவர் (ஒன்பதாந்திருமுறை)

கோயில் - திருவிசைப்பா

நீறணி பவளக்குன்மே! நின்ற நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவனபோகமே! யோக வெள்ளமே! மேருவில் விரா!
ஆறணிசடைஎம் அற்புதக் கூத்தா! அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடிஎம் ஈசனே! உன்னைத் தொண்டனேன் இசையுமா றிசையே!

6. சேந்தனார் (ஒன்பதாந்திருமுறை)

கோயில் - திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டிஅழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே!

7. கருவூர்த் தேவர் (ஒன்பதாந் திருமுறை)

தஞ்சை இராசராசேச்சரம் - திருவிசைப்பா

பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர் தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற்றிருந்த எளிமையை யென்று நான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார் விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே

8. பூந்துருத்தி நம்பிகாட நம்பி (ஒன்பதாந்திருமுறை)

திருவிசைப்பா - திருவாரூர் - பண், பஞ்சமம்

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப் பருகு தோ(று) அமுதமொத்த வர்க்கே
தித்தியா திருக்கும் தேவர்காள்! இவர்தம் திருவுரு இருந்தவா பாரீர்!
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி விடங்கராய் நடம் குலா வினரே.

9. கண்டராதித்தர் (ஒன்பதாந்திருமுறை)
கோயில் - திருவிசைப்பா

செங்கோல் வேந்தன் தென்னன்நாடும் ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடி ஆடும் அணிதில்லை யம்பலத்துள்
எங்கோன் ஈசன் எம்மிறையை என்றுகொல் எய்துவதே!

10. வேணாட்டடிகள் (ஒன்பதாந்திருமுறை)
கோயில் - திருவிசைப்பா

மண்ணோடு விண்ணளவும் மனிதரொடு வானவர்க்கும்
கண்ணாவாய் கண்ணாகா தொழிதலும் நான் மிகக்கலங்கி
அண்ணாவோ என்றண்ணாந் தலமந்து விளித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே

11. திருவாலி அமுதனார் (ஒன்பதாந்திருமுறை)
கோயில் - திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர் படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும் துன்று பொற் குழற்றிருச் சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையும் திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதோறும் என்மனம் தழல்மெழு கொக்கின்றதே

12. புருடோத்தம நம்பி (ஒன்பதாந்திருமுறை)
கோயில் - திருவிசைப்பா

சேயிழை யார்க்கினி வாழ்வரிது திருச்சிற்றம் பலத்தெங்கள் செல்வனே நீ
தாயினும் மிகநல்லை யென்ற டைந்தேன் தனிமையை நினைகிலை சங்க ராஉன்
பாயிரும் புலியத ளின்னு டையும் பையமே லெடுத்தபொற்பாத முங்கண்
டேயிவள் இழந்தது சங்கம் ஆவா எங்களை ஆளுடை ஈசனேயோ!

13. சேதிராயர் (ஒன்பதாந்திருமுறை)
கோயில் - திருவிசைப்பா

அறவனே அன்று பன்றிப் பின்ஏகிய
மறவ னேஎனை வாதைசெய் யேல்எனும்
சிறைவண் டார்பொழில் தில்லையு ளீர்எனும்
பிறைகு லாம் நுதற் பெய்வளையே

14. திருமூலர் (பத்தாந்திருமுறை)
திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

15. திருவாலவாயுடையார் (பதினோராந்திருமுறை)
திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக் கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே!

16. காரைக்காலம்மையார் (பதினோராந்திருமுறை)
அற்புதத் திருவந்தாதி

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானே அக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்று
அம்மானுக் காளாயினேன்.

17. ஐயடிகள் காடவர்கோன் (பதினோராந்திருமுறை)
ஷேத்திரத் திருவெண்பா

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே - நல்ல
கிளைகுளத்து நீர்அளவே கிற்றியே நெஞ்சே
வளைக்குளத்துள் ஈசனையே வாழ்த்து

18. சேரமான் பெருமாள் நாயனார் (பதினோராந்திருமுறை)

பாடிய வண்டுறை கொன்றையி னான்படப் பாம்புயிர்ப்ப
ஓடியதீயால் உருகிய திங்களின் ஊறல்ஒத்த
தாடிய நீறது கங்கையுந்தெண்ணீர் யமுனையுமே
கூடிய கோப்பொத்த தால் உமைபாகம் எம் கொற்றவற்கே!

19. நக்கீரதேவ நாயனார் (பதினோராந்திருமுறை)
கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி

அஞ்செழுத்துங் கண்டீர் அருமறைகள் ஆவனவும்
அஞ்செழுத்துங் கற்க அணித்தாகும் - நஞ்சவித்த
காளத்தி யார்யார்க்குங் கயிலாய நின்னை
நினைத்தருவி கண்சோர நின்று.

20. கல்லாட தேவர் (பதினோராந்திருமுறை)
திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

பிரிவின் தன்மை உருவுகொண் டனையவன்
போழ்வார் போர்த்த காழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையிற் கட்டிய உடைதோற் கச்சையன்

தோல்நெடும் பையிற் குறுமயிர் திணித்து
வாரில் வீக்கிய வரிக்கைக் கட்டியன்
உழுவை கூனுகிர் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலைஉத் தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக்கவடி புல்லினன்
முடுகு நாறு குடிலை யாக்கையன்
வேங்கை வென்று வாகை சூடிய

சங்கரன் றன்னினத் தலைவன் ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி
ஏற்றுக் கல்வனங் காற்றில் இயங்கிக்
கனையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக்காய்ச்சி
நாவில் வைத்த நாடபோ னகமும்

தன்றலைச் சொருகிய தண்பள்ளித் தாமமும்
வாய்க்கல சத்து மஞ்சன நீரும்
கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசை அடியால் நீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவன் நேசங் காட்ட
முக்கண் அப்பனுக் கொருகணில் உதிரம்
தக்கி ணத்திடை இழி தர அக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந் தரற்றிப்
புன்மருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒன்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றக் கண்ணையும்
பகழித் தலையாம் அகழ ஆண்டகை
ஒருகையாலும் இருகை பிடித்து
ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய்
நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட்டு வர் தந் திருவடிகை தொழக்
கருவேட்டு ழல் வினைக் காரியங்கெடுமே.

21. கபிலதேவ நாயனார் (பதினோராந்திருமுறை)
மூத்தநாயனார் திரு இரட்டைமணிமாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலார் கூப்புவர் தங் கை

22. பரணதேவ நாயனார் (பதினோராந்திருமுறை)
சிவபெருமான் திருவந்தாதி

ஒன்றுரைப்பீர் போலப் பலஉரைத்திட் டோயாதே
ஒன்றுரைப்பீராயின் உறுதுணையாம் - ஒன்றுரைத்துப்
பேரரவம் பூண்டு பெருந்தலையில் உண்டுழலும்
பேரரவம் பூணும் பிரான்

23. இளம் பெரமானடிகள் (பதினோராந்திருமுறை)
சிவபெருமான் திருமும்மணிக்கோவை

வேலை முகடும் விசும்பகடுங் கைகலந்த
காலை நீர் எங்கே கரந்தனையால் - மாலைப்
பிறைக்கீறா கண்ணுதலா பெண்பாகா ஐயோ
இறைக்கூறாய் எங்கட் கிது.

24. அதிராவடிகள் (பதினோராந்திருமுறை)
மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே - தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு

25. திருவெண்காட்டு அடிகள் (பதினோராந்திருமுறை)
கோயில் நான்மணிமாலை

நானே பிறந்து பயன்படைத்தேன் அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகி என் தீமையெல்லாம் அறுத்துத்
தானே புகுந்தடி யேன் மனத்தே வந்து சந்திக்கவே

26. நம்பியாண்டார் நம்பி (பதினோராந்திருமுறை)
திருத்தொண்டர் திருவந்தாதி

உலகு கலங்கினும் ஊழி திரியினும் உள்ளொருகால்
விலகுதல் இல்லா விதியது பெற்ற நல் வித்தகர் காண்
அலகில் பெருங்குணத் தாரூர் அமர்ந்த அரனடிக்கீழ்
இலகுவெண்ணீறுதம் மேனிக் கணியும் இறைவர்களே

27. சேக்கிழார் (பன்னிரண்டாந்திருமுறை)
திருநாவுக்கரசர் புராணம்

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத்தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர் தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

திருச்சிற்றம்பலம்



சிவ வடிவங்கள்

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியான சிவபரம்பொருளின் அருள் வடிவங்களை நம் முன்னோர்கள் அவனருளையே கண்ணாகக் கொண்டு கண்டுமகிழ்ந்து போற்றிய தோடமையாமல் நம்மனோர் உய்வடைய வேண்டி அவ்வடிவங்களைத் தம் அருட் பாடல்களின் வாயிலாகச் சுட்டிக் காட்டியும் சென்றுள்ளனர் அவற்றைத் தொகுத்து ஈண்டுக் காண்போம்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்று ஐம்பெரும் பூதங்களின் வடிவாக வணங்கப் பெற்று வந்த சிவன் பின்பு ஞாயிறு திங்கள் இயமானன் எனும் வடிவங்களுடன் அட்டமூர்த்தியாக வழிபடப் பெற்றான். இவ்வாறு அருவமாகவும், அருவுருவமாகவும் வணங்கப் பெற்று வந்த சிவன் வடிவ நிலைகள் காலப்போக்கில் நின்ற, இருந்த வடிவினவாய், போக, வேக, யோக வடிவ நிலையினதாய் வளர்ச்சி பெற்று அவ்வடிவங்கள் சிவன் மகேஸ்வர வடிவங்கள் என்றும் அவை இருபத்தைந்து எனவும் வகுத்துரைக்கப் பெற்றன. பின்னர் 'ஐயைந்தின் அப்புறத்தானும்' என்று சிவன் இருபத்து ஆறாவது வடிவமாக ஆரூர்த் தியாகராசர் வடிவம் சுட்டப் பெற்றது.

அவ்வடிவங்களேயன்றி அதன் பின்னர்த் தோன்றிய சைவ சமய இலக்கியங்கள் மற்றும் புராணங்கள் சுட்டிக் காட்டிய சிவ வடி வங்களையும் சேர்த்து சிவபெருமானுடைய அஷ்டாஷ்ட வடிவங்கள் என்னும் அறுபத்து நான்கு வடிவங்களைச் சிவபராக்கிரமம் என்னும் நூல் வரையறுத்துக் கூறுவதாயிற்று.

இவ்வாறாகக் காலந்தொறும் வளர்ச்சி பெற்ற சிவன் எண்பத்தொரு வடிவப் பெயர்கள்,

சிவவடிவங்கள்	*திரு. மா. சிவகுருநாதப்பிள்ளை*
சிவமூர்த்தங்கள்	*திரு. வீ.சா. குருசாமி தேசிகர்*
மகேஸ்வர வடிவங்கள்	*திரு. வலயப்பேட்டை ரா. கிருஷ்ணன்*
சிவத்திருமேனிகள்	*திரு. பு.மா. செயசெந்தில்நாதன்*

சிற்ப ரத்தினம் காசியப சிற்ப சாத்திரம்

சகளாதிகாரம், தென்குடித்திட்டைத் தலபுராணம்

ஆகிய நூல்களின் அடிப்படையில் ஈண்டுத் தொகுத்தளிக்கப் பெறுகின்றது.

1. அரியர்த்தர்
2. அர்த்தநாரி
3. அகோரவீரபத்தர்
4. அகோரஸ்திரமூர்த்தி
5. அசுவாருடர்
6. அந்தகாசு ரஹரணர்
7. ஆடல்வல்லான்
8. ஆபத்சகாயர்
9. இடபாரூடர்
10. இடபாந்திகர்
11. இலகுளீசர்
12. இலிங்கமூர்த்தி
13. இலிங்கோத்பவர்
14. உக்கிரர்
15. உமாமகேசர்
16. ஊர்த்துவ தாண்டவர்
17. உமாசகாயர்
18. உமேசர்
19. எக்ஞேஸ்வரர்
20. ஏகபாதர்
21. ஏகபாதத்திருமூர்த்தி
22. ஏகாதசருத்ரர்
23. கல்யாணசுந்தரர்
24. கங்காளர்
25. கங்காதரர்
26. கங்காவிசர்ச்சனர்
27. கஜாரி
28. கஜாந்திகர்
29. கஜமுக அனுக்ரகர்
30. கருடாந்திகர்
31. காமாரி
32. காலாரி
33. காலபைரவர்
34. கிராதர்
35. கூர்ம சங்காரர்
36. குருமூர்த்தி
37. கௌரிவரப்ரதர்
38. கௌரி லீலாசமேதர்
39. சந்திரசேகரர்
40. சக்ரதானர்
41. சக்ரப்பிரதர்
42. சலந்தராரி
43. சதாசிவர்
44. சர்வ சம்ஹாரர்
45. சந்தியாதாண்டவர்
46. சண்டேசதாண்டவர்
47. சண்டேசானுக்ரகர்
48. சார்த்தூலகரி
49. சிம்மக்னர்
50. சிவலிங்கம்
51. சிஷயபாலம்
52. சுரகரேசர்
53. சுகாசனர்
54. சோதிலிங்கேசுரர்
55. சோமாஸ்கந்தர்
56. தட்சயக்ஞர்
57. திரிபுராரி
58. திரிபாததிருமூர்த்தி
59. தெட்சணா மூர்த்தி
60. நீலகண்டர்
61. பாசுபதர்
62. பிரார்த்தனாமூர்த்தி
63. பிட்சாடனர்
64. பிரம்மசிரச்சேதர்
65. புஜங்கலளிதர்
66. புஜங்கத்திராசர்
67. பைரவர்
68. முகலிங்கம்
69. மச்சாரி
70. மகாசதாசிவர்

71. வராகசம்ஹாரர்
72. விக்னப்ரசாதர்
73. வீரபத்ரர்
74. வீணாதெட்சிணாமூர்த்தி
75. வடுகர்
76. யோகதட்சிணாமூர்த்தி
77. ஹரிவிரிஞ்சாதரணர்
78. க்ஷேத்திரபாலர்
79. ரக்தபிட்சாபிரதானர்
80. தாம்பத்ய தெட்சிணா மூர்த்தி
81. திரிமூர்த்தி

இவ்வடிவ விளங்கங்களை முனைவர் சிவ. திருச்சிற்றம்பலம் அவர்களுடைய தேவார மூவர் காட்டும் சிவ வடிவங்கள் என்னும் ஆய்வுக் கட்டுரை நூலில் காணலாம்.

சைவ சமயச் சின்னங்கள்

1. திருநீறு:

நெற்றியில் திருநீறு அணிதல் சிவனாடியர்க்கு அழகாகும். நீறு இல்லா நெற்றிப்பாழ் என்பது அவ்வையார் வாக்கு. வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் தாம் அஞ்சுவதாகக் அப்பர் பாடியுள்ளார். திருவென்னீறுஅணிந்தார் சிறப்பினை இராமலிங்க அடிகள்,

பாடற்கினிய வாக்களிக்கும் பாலும் சோறும் பகிர்ந்தளிக்கும்
பாடற்கினிய அடியவர்தம் கூட்டமளிக்கும் குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே! நீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தேடற்கரிய திருவளிக்கும் சிவாய நம என்றிடு நீறே

எனப்பாடுகின்றார்.

2. உருத்திராக்கம் :

கண்டிகை எனப்பெறும் உருத்திராக்கம் ஆயிரம் அணிந்தவரைச் சிவபெருமான் என வானவரும் வணங்குவர் என்று பிரமோத்திர காண்டம் கூறுகின்றது.

ஆய மாமணி ஆயிரம் புனைந்திடில வரை
மாய நான்முகன் புரந்தரன் வா்னவர் முதலோர்
பாயுமால் விடைப்பரமெனப் பணிகுவர் என்றால்
தூயமாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்லீர்.

3. திருஐந்தெழுத்து :

'நமச்சிவாய' 'சிவாய நம' எனப்பெறும் திருஐந்தெழுத்தின் சிறப்பினை,

அஞ்செழுத்தே ஆக மமும் அண்ணலருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் - அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் யாவைக்கும் மப்பாலாம்
மோனந்த மா முத்தியும்

என்று உண்மை விளக்கம் என்ற சாஸ்திர நூல் கூறுகின்றது.

சைவ சமய இதழ்கள்

சைவத் திருமுறைகள், சித்தாந்த நூல்கள், கோயில்கள், வழிபாட்டு முறைகள் குறித்த கட்டுரைகளைத் தாங்கித் திங்கள் தோறும் வெளிவரும் சைவ சமய இதழ்கள்.

1. மெய்கண்டார் - திருவாவடுதுறை ஆதீனம்.
2. ஞானசம்பந்தம் - தருமபுர ஆதீனம்.
3. சிவ சிவ - சூரியனார்கோயில் ஆதீனம்.
4. குமரகுருபரர் - திருப்பனந்தாள் காசி மடம்.
5. சித்தாந்தம் - சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம்.
6. உழவாரம் - மதுரை பன்னீரு திருமுறை மன்றம்.
7. தெய்வச் சேக்கிழார் - காஞ்சிபுரம்.
8. தமிழ்வேதம் - குடியாத்தம் சிவனடியார் திருக்கூட்டம்.
9. திருச்சிற்றம்பலம் - பாண்டிச்சேரி குக. நமச்சிவாயம்.

அக, புற சந்தனாச்சாரியார்கள்

அகச் சந்தனாச்சாரியர்


1. நந்தி தேவர்
2. சனற்குமாரர்
3. சத்திய ஞான தரிசனி
4. பரஞ்சோதி முனிவர்

புறச் சந்தனாச்சாரியர்

1. மெய்கண்டார்
2. அருணந்தி சிவாச்சாரியார்
3. மறைஞான சம்பந்தர்
4. உமாபதி சிவம்.

பதினான்கு சாத்திரங்கள்

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்.



சிவ வழிபாட்டுக்குரிய மந்திரங்கள் ஐந்து

அபிடேக மந்திரம்:

சிவபெருமானுக்குரிய திருவுருவங்கட்கு அபிடேகம் செய்யும் பொழுது சொல்ல வேண்டிய மந்திரம் சத்யோசாத மந்திரம் எனப்பெறும் அம் மந்திரமாவ்து *'ஓம் சிவாய நம சிவாய ஓம் ஓங் உங் சிவாய ஓம்'* என்பதாகும்.

ஆராதனை மந்திரம்:

அபிடேகம் முடிந்த பின்னர் தூபதீப ஆராதனைகள் செய்து வழிபடும் போது சொல்ல வேண்டிய மந்திரம் அகோர மந்திரம் எனப்பெறும் *'ஓம் நமசிவாய நம'* என்பது அகோர மந்திரம் எனப்படும்.

அர்ச்சனை மந்திரம்:

அபிடேக ஆராதனைகள் முடிந்த பின்னர் உச்சரித்துப் போற்றி வழிபட வேண்டிய மந்திரம் வாமதேவ மந்திரம் ஆகும். *'ஐயும் கிலியும் சிவாய நம உங் தேங் தேங் ஓங் சிவாயநம'* என்பதே வாமதேவ மந்திரம் ஆகும்.

பிரசாத மந்திரம்:

அபிடேக ஆராதனை அர்ச்சனை முதலானவை முடிந்த பின்னர் சிவப்பிரசாதங்களான அபிடேகத் தீர்த்தநீர், திருநீறு முதலானவற்றைப் பெறும்போது கூறவேண்டிய மந்திரம் *'நமசிவாய அங்உங் வங் சிவாய நம'* என்னும் தத்புருஷ மந்திரமாகும்.

தியான மந்திரம்:

வழிபாடுகள் அனைத்தும் நிறைவுற்ற பின்னர் மனதினால் சிந்தித்து 108 முறை உச்சரித்து சிவனை வணங்குவதற்குரிய மந்திரம் ஈசான மந்திரம் எனப்பெறும். *'மங் வங் சிங் ஓங் கிலியும் கிறியும் சிவாய'* என்பதே ஈசான மந்திரமாகும்.

இந்த ஐந்து மந்திரங்களால் நாள்தோறும் சிவனை வணங்கி வந்தால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சித்தியாகும்.

' நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப'

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

சிவாலய வழிபாட்டின் நிறைவாக இறைவனிடம் விண்ணப்பிக்க வேண்டிய பதிகம்

மறைகன் நிந்தனை சைவநிந் தனைபொறா மனமும்
தறுகண் ஐம்புலன் களுக்கு ஏவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீ தெனாப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோடு உறவும்

யாதும் நல்லன்பர் கேட்கினு ம்உதவுறும் இயல்பும்
மாதவத் தினோர் ஒறுப்பினும் வணங்கிடும் மகிழ்வும்
ஓதும் நல்லுப தேசமெய் யுறுதியும் அன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லென்க்கொளுந் தெளிவும்

மனமும் வாக்கும் நின் அன்பர்பால் ஒருப்படு செயலும்
கனவி லும்உன தன்பருக்கு அடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாள்தோறும் உரைத்திடும் பொலிவும்

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏமு றும்பரதாரம் நச்சிடாதநன் னோன்பும்
தூய்மை நெஞ்சில் யான் என தெனும்செருக்குறாத் துணிவும்

துறக்கமீ துறையினும் நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும! இவ்வரம்
மறுத்திடாது எமக்குநீ வழங்கல வேண்டுமால்!

- திருவையாற்றுப் புராணம்

திருச்சிற்றம்பலம்



உ

சிவமயம்

சூரியனார்கோயில் ஆதீனகர்த்தர்

சீர்வளர்சீர்

சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

அருளிய

ஆசியுரை

தற்கால மக்கள் தங்களுடைய வாழ்வில் ஏற்படும் பல்வேறு துன்பங்களில் இருந்தும் விடுபடச் சிவபரம்பொருளை வழிபாடு செய்து வணங்கி வருகின்றனர்

அவ்வாறு கோயிலுக்குச் சென்று வழிபடும் அன்பர்கள் வழிபாடு செய்யும் முறைமையினை முழுமையாக அறிந்திராத நிலையில் தம் மனம் போன போக்கில் வழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் சிவாலயங்களுக்குச் சென்று வழிபடும் முறையைப் பற்றிய முழுமையான விளக்கத்துடன் ''சிவாலய வழிபாடு'' என்னும் இந்நூலை எமது ஆதீனத் திங்களிதழ் 'சிவ சிவ' ஆசிரியர் தி.திருநாவுக்கரசு அவர்கள் எழுதியுள்ளார்கள். அனைவருக்கும் பயன்தரும் இந்நூலை அன்பர்கள் வாங்கிப் பயன்பெறுவார்களாக. மேலும் பல நூல்களைத் இந்நூலாசிரியர் தொடர்ந்து வெளியிடும் வகையில் எல்லா நலன்களையும் பெற்றுச்சிறக்க எமது ஆன்மார்த்த மூர்த்தியான அருள்மிகு காளத்திநாதரைச் சிந்தித்து ஆசீர் வதிக்கின்றோம்.